**SC.No. 161/2025**
**நாள்.** 17.06.2026.
**அ.சா. 3 – விஜி பிரபாகரன்**
( 6ம் எதிரி ஆஜரில்லை. 6ம் எதிரி சார்பில் 355 –BNSS கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. மற்ற எதிரிகள் ஆஜர்.)

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை எத்தனைமுறை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து இரண்டுமுறை. எந்தெந்த தேதிகளில் என்றால் சம்பவம் நடந்த இரவு 02.00 மணியளவில் ஒருமுறையும், அதற்கு பிறகு மறுநாள் விசாரித்தார்கள். நான் குடியிருப்பது சேரன்கோட்டை என்றால் சரிதான். எந்த தெரு என்றால் தெரு இல்லை. நான் வழக்கு சம்மந்தமாக நீதித்துறை நடுவரிடம் வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். குற்றவியல் நீதித்துறை நடுவரிடம் வாக்குமூலம் அளிக்கும்போது என்னை இராமேஸ்வரம் துறைமுகம் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் என சொன்னேனா என்றால் இல்லை. அதேபோல் குற்றவியல் நீதித்துறை நடுவரிடம் வாக்குமூலம் அளிக்கும்போது சத்ரியன், சேதுபதி, சூரியபிரகாஷ் எல்லோருக்கும் கத்திகுத்து விழுந்தது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் குற்றவியல் நீதித்துறை நடுவரிடம் மேற்படி 3 நபர்களுக்கும் யாரால் தாக்கி காயம் ஏற்பட்டது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கு 4, 5 மாதங்களுக்கு முன்பாக நடந்ததாக சொல்லப்படும் பிரச்சனைக்கு பிறகு நாங்களும், தெற்குக்கரையூர் மக்களும் சமரசமாகிவிட்டோம் என்றால் சரிதான். அதன் பிறகுதெற்குக்கரையூர் வழியாக பலமுறை சென்று வந்துள்ளேன் என்றால் சரிதான். 14.01.2025ம் தேதி நான் இறந்துபோன நம்புகுமார், சேதுபதி மற்றும் சத்ரியன் ஆகிய நால்வரும் எப்போதிருந்து ஒன்றாக இருந்தோம் என்றால் காலையிலிருந்து மதியம் 02.00 மணிவரை நானும், சேதுபதியும் ஒன்றாக இருந்தோம், அதன் பிறகு சத்ரியனும்,

நம்புக்குமாரும் எங்களோடு இரவு 08.00 மணிவரை இருந்தார்கள். நம்புக்குமார் அன்றைய தினம் மதிய உணவு எத்தனை மணிக்கு சாப்பிட்டார் என்றால் தெரியாது. நாங்கள் நால்வரும் ஒன்றாக இருந்தபோது நம்புகுமார் மது அருந்தியிருந்தாரா என்றால் இல்லை. மதியம் 02.00 மணியிலிருந்து இரவு 08.00 மணிவரை நாங்கள் நால்வரும் ஒரே இடத்தில்தான் இருநதோம் என்றால் சரிதான். நாங்களும், தெற்குக்கரையூர் மக்களும் சமரசம் ஆன பிறகு எங்களுக்குள் மனவருத்தம் ஏற்பட்டது கிடையாது என்றால் சரிதான். 14.01.2025ம் தேதி நாங்கள் நால்வரும் பகல் 02.00 மணியிலிருந்து இரவு 08.00மணிவரை ஒன்றாக இருந்தபோது தெற்குக்கரையூரை சேர்ந்த யார் நாங்கள் இருந்த இடத்திற்கு வந்தார்கள் என்றால் யாரும் வரவில்லை. முதன் முறையாக சொர்கேஷ்வரனும், இரண்டு நபர்களும் வந்து எங்களிடம் வந்து ஏதாவது கேள்வி கேட்டார்களா என்றால் இல்லை. சம்பவம் நடக்கும்போது எத்தனை மணியிருக்கும் என்றால் இரவு 07.30 – 08.00 இருக்கும். நானோ, நம்புகுமாரோ, சத்ரியனோ மற்றும் சேதுபதியோ சத்தம் போட்டோமா என்றால் இல்லை. நாங்கள் நால்வரும் பேசிக்கொண்டிருந்த இடத்திற்கு அருகில் சோத்துக்கட்டி என்பவரது டீக்கடை உள்ளது என்றால் சரிதான், ஆனால் அவர் எப்போதாவதுதான் கடையை திறப்பார். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எனக்கு முதுகுப்பகுதியில் மட்டும் ஒரு காயம்தான் என்றால் வலதுமுதுகுப்பகுதியில் மட்டும் ஒருகாயம். மற்ற நபர்களுக்கு அவர்களது உடம்பில் எங்கெங்கு காயங்கள் ஏற்பட்டது என சொல்ல முடியுமா என்றால் முடியாது. நாங்கள் நால்வரும் சத்தம்போட்டவுடன் எதிர்கள் அனைவரும் ஓடிவிட்டார்கள் என்றால் சரிதான். சம்பவம் எவ்வளவு நேரம் நடந்திருக்கும் என்றால் அரை மணி நேரம். சம்பவம் நடந்த அரைமணிநேரத்தில் நான் சொன்ன நபர்கள் தவிர சேரன்கோட்டை மற்றும் தெற்குக்கரையூரை சேர்ந்த நபர்கள் யாராவது வந்தார்களா என்றால் இல்லை. காயம்பட்டு கீழே விழுந்த நம்புகுமாரை நான் தூக்கிப்பார்த்தேனா என்றால் இல்லை. எனது ஆடைகளில் இரத்தக்கறை

படிந்திருந்ததா என்றால் படிந்திருந்தது. அந்த உடைகளை போலிசாரிடம் நான் கொடுத்தேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்த இடத்திலிருந்து இராமேஸ்வரம் மருத்துவமனைக்கு சென்றபோது எத்தனை மணியிருக்கும் என்றால் இரவு 09.00 மணி. மருத்துவமனைக்கு சென்ற பிறகு மருத்துவர் எனக்கு யாரால், எத்தனை மணிக்கு, எங்கு வைத்து காயம் ஏற்பட்டது என கேட்டாரா என்றால் கேட்டார். அவ்வாறு கேட்டபோது அடையாளம் தெரியாத பலநபர்களால் எனக்கு காயம் ஏற்பட்டதாக சொன்னேனா என்றால் ஆமாம். இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கும் எவ்வளவு துாரமிருக்கும் என்றால் தெரியாது, ஆனால் பேருந்தில் பயணம் செய்தால் 1 மணிநேரமாகும். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்போது போலிசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் நான் சிகிச்சைக்கு சேர்ந்த போது இரவு மணி 02.00 இருக்கும். போலிசார் அதிகாலையில் வந்தார்கள். போலிசார் எனக்கு காயம் ஏற்பட்டது சம்மந்தமாக விசாரித்தார்கள். சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் கத்திகளை நான் பார்த்தேனா என்றால் இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் வைத்துப் பார்த்தேன். எனக்கு இவ்வழக்கு எதிரிகளின் தாய், தந்தை பெயர்கள் தெரியுமா என்றால் தெரியாது. எதிரிகள் அனைவரும் தெற்குக்கரையூரில் எங்கு, எந்த பகுதியில் குடியிருக்கிறார்கள், அவர்களுடன் உடன் பிறந்தவர்கள் பெயர், விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மந்தை மாரியம்மன் கோவில் எங்கு உள்ளது என்றால் தெற்குக்கரையூருக்கு தெற்கே உள்ளது. சேரன்கோட்டையிலிருந்து இராமேஸ்வரம் செல்ல வேண்டும் என்றாலும், இராமேஸ்வரத்திலிருந்து சேரன்கோட்டை செல்லவேண்டும் என்றாலும் மந்தைமாரியம்மன் கோவில் வழியாக செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். ஆனால் அந்த வழியாகவும் செல்லலாம். மந்தைமாரியம்மன் கோவில் தெற்குக்கரையூரிலிருந்து தெற்கே அரை கிமீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் வழக்கமாக சேரன்கோட்டை

செல்வதற்கு பூமாரியம்மன் கோவில் வழியாகத்தான் செல்வோம் என்றால் சரிதான். என்னை யார் விசாரித்தார்கள் என்றால முதலில் சார்பு ஆய்வாளரும், பிறகு ஆய்வாளரும் விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கும்போது கத்திகளில் அளவுகள் மற்றும் அடையாளங்கள் குறித்து சொன்னேனா என்றால் இல்லை. எனக்கு நம்புகுமார் இறந்துவிட்டார் என்ற செய்தி எப்போது தெரியும் என்றால் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்ற 10 நிமிடத்தில் இறந்துவிட்டார் என தெரியும். நான் முதல் விசாரணையில் சொன்ன எந்த விசயமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நம்புகுமார், சேதுபதி, சத்ரியன், சூர்யபிரகாஷ், மற்றும் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கும் இவ்வழக்கில் கண்ட எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. காயம்பட்டு இறந்துபோன நம்புகுமார் குடிபோதையில் கலவரம் செய்ததால் கூட்டத்தில் இருந்த யாரோ சில நபர்களால் காயம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.